செந்தமிழ்

பகுதி : 9
தொகுதி : 97
செப்டம்பர் 2003

(தோற்றம் 1903) திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2034

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
தோற்றம் 21.03.1867

மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி	தலைவர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	துணைத்தலைவர்
திரு. இரா. அழகுமலை	செயலாளர்
திரு. மா. சங்கர பாண்டியன்	உறுப்பினர்
திரு. டாக்டர். ந. சேதுராமன்	உறுப்பினர்
திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக்	உறுப்பினர்
திரு. ச. பரங்குன்றம்	உறுப்பினர்
திரு. வே. திருவரங்கராசன்	உறுப்பினர்
திரு. இரா.குருசாமி	உறுப்பினர்
திரு. க. முத்தையா பசும்பொன்	உறுப்பினர்
திரு. இரா. கண்ணன்	உறுப்பினர்
திரு. சோ. இராமகுரு	உறுப்பினர்

கல்லூரிக்குழு

டாக்டர்.திரு.ந.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS.,	தலைவர்
திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல்	செயலாளர்
திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்.,	உறுப்பினர்
திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார்	உறுப்பினர்
திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்.,	உறுப்பினர்
திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ.	உறுப்பினர்
திரு. இரா.குருசாமி, பி.ஏ.,	உறுப்பினர்
திரு. சோ.இராமகுரு	உறுப்பினர்
திரு. க. முத்தையா பசும்பொன்	உறுப்பினர்
டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி.,	உறுப்பினர்
திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்.ஃபில்.,	உறுப்பினர்
டாக்டர்.திரு. செ.கந்தசாமி, எம்.ஏ.,பிஎச்.டி.,	உறுப்பினர்
டாக்டர்.திரு. க.சின்னப்பா, எம்.ஏ.,பி.எச்.டி., பல்கலைக்கழக உறுப்பினர்	உறுப்பினர்

செந்தமிழ்

பகுதி : 9
தொகுதி : 97
செப்டம்பர் 2003

(தோற்றம் 1903) திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2034

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
தோற்றம் 21.03.1867

மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

இதழ் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 60	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ் கட்டணம்	ரூ. 6	

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

பொருளடக்கம்

இதழ்மணம் 305

திருக்கோயில்களில் சீர்திருத்தம் 307
முனைவர் தமிழண்ணல்

ஆறுமுகநாவலரின் பதிப்புப்பணி 310
வெ.இராமச்சந்திரன்

திருவெம்பாவை 16 316
பேராசிரியர் சுப. அண்ணாமலை

பாராட்டியுரைப்பது சேவையா? தேவையா? 319
முனைவர் அ.சிவக்கண்ணன்

சொற்கள் பொருள் உணர்த்தும் முறை 322
முனைவர் தெ. மேகநாதன்

"பாடாணும்" மூலிகையே! 327
க.குழந்தைவேல் பன்னீர்செல்வம்

தொல்காப்பிய இலக்கியக் கொள்கை (அகம்) 336
முனைவர் பெ.சுயம்பு

இதழ்மணம்

மக்கள் தங்கள் இன்பதுன்பங்களைப் பகிர்ந்துகொள்ளுமிடம் திருக்கோயில்கள். இறைவனுடைய சந்நிதி அன்பும் அருளும் நிறைந்த இடம். அங்கு பணி செய்பவர்களுடைய நடத்தை குறித்துப் பேராசிரியர் தன் அனுபவத்தை எழுதியுள்ளார்கள். வாசகர்களுடைய சிந்தனைக்கு வினா தொடுத்துள்ளார்கள். எழுதுங்கள்.

சென்ற இதழின் தொடர்ச்சியாக ஆய்வாளர் திரு.வெ.இராமச்சந்திரன் அவர்கள் ஆறுமுகநாவலரின் பதிப்புப் பணி என்னும் தலைப்பில் நாவலரின் அருந் தமிழ்த் தொண்டு குறித்து செய்திகளைப் பதிவு செய்துள்ளார்கள். நாவலர் அடிக்கடி நினைவுகொள்ளத்தக்க நற்றமிழ்க்காவலர்.

பேராசிரியர் சுப.அண்ணாமலை அவர்கள் திருவெம்பாவை பதினாறாம் திருப்பாட்டுக்கு விளக்கம் அளித்துள்ளார்கள். வாழ்க்கையை அருளின் துணைகொண்டு நடத்தி, செய்யும் செயல்களையெல்லாம் தனிப்பெருங் கருணையோடு செய்து, அந்த அருளை அனுபவிப்பதை அருள் அனுபவம் என்பர் வள்ளலார். இருபெரும் ஞானியர்களின் அனுபவத்தையும் பேராசிரியர்தம் வாழ்வாகக் கொண்ட அருளாளர். அவர்தம் விளக்கம் அருள் அனுபவமாகவே அமைந்துள்ளது. கற்று இன்புறுக.

முனைவர் அ.சிவக்கண்ணன் பாராட்டியுரைப்பது சேவையா? தேவையா? என்னும் கட்டுரையில் சுவைபடச் செய்திகளை பகிர்ந்துகொள்கிறார். அன்றாட வாழ்க்கையில் சிறுசிறு நிகழ்ச்சிகளில் காணப்படும் நல்லவற்றைப் பாராட்டியுரைக்கின்ற பெரிய மனது வேண்டும் என்பதைப் பேராசிரியர் சுவைபட விளக்கியிருப்பது எல்லோரும் நினைவில் போற்றிக் கடைபிடிக்க வேண்டிய இனிய நற்செய்தி. பேராசிரியரை நாமும் பாராட்டுவோம்.

முனைவர் தெ.மேகநாதன், “எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே” என்னும் தொல்காப்பிய நூற்பாவை

நச்சினார்க்கினியர், சேனாவரையர், தெய்வச் சிலையார் முதலான உரையாசிரியர்கள் கருத்தை ஆய்ந்து திறனாய்வு செய்து 'சொற்கள் பொருள் உணர்த்தும் முறை' என்னும் தலைப்பில் எழுதியுள்ளார். ஆய்வாளர்கள் சிந்தனைக்குரியதாகும்.

பேராசிரியர் க.குழந்தைவேல் பன்னீர்செல்வம் "பாடாணும் மூலிகையே" என்னும் தலைப்பில் நீண்ட நெடிய ஆய்வு நிகழ்த்தியுள்ளார்கள். அழிஞ்சில் என்னும் மரம் பாடாண் மூலிகையே என்னும் அவரது துணிவு மேலும் சிந்திப்பதற் குரியதாகும்.

பேராசிரியர் முனைவர் பெ.சுயம்பு அவர்கள் தொல்காப்பியருடைய அகப்பொருள் இலக்கியக் கொள்கையை தெளிவுறுத்துவதோடு அகப்பொருள் இலக்கியத்திற்குரிய இலக்கியக் கட்டமைப்பை முழுமைபட விளக்கி எழுதியுள்ளார். கற்போருக்கு அறிவின்பம் பயப்பதாகும்.

சென்ற திங்கள் திருச்சியில் நடைபெற்ற ஓய்வு பெற்ற கல்லூரி ஆரிரியர்கள் மாநில மாநாட்டில் கலந்துகொண்ட போது திருமழபாடி பேராசிரியர் முனைவர். அ.ஆறுமுகம் அவர்கள் செந்தமிழ் இதழுக்குரிய ஆண்டுக்கட்டணம் கொடுத்தார்கள். அவர்களுக்கு நம் நல்வாழ்த்துக்கள். தமிழன்பர்கள் செந்தமிழ் இதழ் புரவலர் கட்டணம் அளித்துப் போற்ற வேண்டுகிறேன்.

பதிப்பாசிரியர்

திருக்கோயில்களில் சீர்திருத்தம்

முனைவர் தமிழண்ணல்

(இக்கட்டுரையைப் படித்துவிட்டு வாசகர்கள் தங்கள் கருத்துக்களை எழுதுமாறு வேண்டுகிறேன்.)

அண்மையில் திருச்செந்தூர் போயிருந்தோம். மக்கள் போகும் பொது வரிசையில் நகர்ந்தபடி இருந்தோம். என் துணைவி கையில் அருச்சனைத் தட்டு இருந்தது. எங்களைப் பார்த்த ஒரு பிராமணர் ஓடி வந்தார். தாம் அருச்சனை செய்வதாகச் சொல்லி, தட்டை வாங்கிச் சென்றார். முருகன் திருமுன் சென்றதும், தீபம் காட்டி அதைத்திரும்பத் தருவார் என நம்பி, சாரி வரிசையில் விரைந்து நகர்ந்துகொண்டிருந்தோம். சில நிமிடங்களில் எங்கோ தேங்காயை உடைத்துவிட்டு, எங்களிடம் கொண்டுவந்து தட்டைத் தந்து விட்டார். 'என்ன சாமி! இன்னும் முன்னர் வரவில்லையே. அதற்குள் எங்கே அருச்சனை செய்தீர்கள்?' என்று என் துணைவிகேட்டதற்கு, அவர் பதிலே சொல்லவில்லை. என்னிடம் இருபது ரூபாய் கொடுங்கள் என்றார். இவ்வளவுக்கும் முறைப்படி அருச்சனைச் சீட்டு வேறு வாங்கியிருந்தோம். அவர் கட்டாயப்படுத்தி இருபது ரூபாயைப் 'பறித்துக்'கொண்டுதான் போனார்.

முருகன் முன்னே எங்கள் வரிசை போன போது, நின்று கும்பிடவிடாமல் விரட்டினார்கள். முன்னே சிறப்புப் பணம் கட்டியவர்கள் இருந்தும் நின்றும் முற்றிலும் மறைத்திருக்க, இந்தப் பூணூல் போட்ட முதுகுகள் போய் வருவதற்கிடையே முருகனும் ஒருகணம் தெரிந்தார். எங்களிடம் பணம் பறித்த 'ஐயரை' - அந்தணர் வடிவில் நாங்கள் பார்க்கவில்லை. ஒரு கொள்ளைக் கூட்டத்து, அடியாரைப்போல இருந்தார். அவர் முகத்திலும் அருள் இல்லை. மாறாக யாரிடம் பணம் பறிக்கலாம் என்று மோப்பம் பிடிக்கும் கூர்மை வெறிச்சோடியது.

இதை என் நண்பர் ஒரு செட்டியாரிடம் கூறினேன். அவர் குறிப்பிட்ட ஒருவர் பெயரைச் சொல்லி, அவரிடம் நூறு ரூபாய் கொடுத்துவிட்டால். அவர் மிக நன்றாகச் சுவாமி தரிசனம் செய்து

வைப்பார் என்றார். அவரிடம் கேட்டுக்கொண்டு போகாத தப்பை உணர்ந்தேன். பிறகு நான் அவரிடம் 'ஆயிரம் ரூபாய் கொடுத்தால்...' என்று இழுத்தேன். அவர் சொன்னார்; "ஒருவேளை சுப்பிரமணியரையே உங்களிடம் தூக்கித் தந்துவிடுவார்..." என்று சிரித்தார்.

சென்ற ஆண்டு நாங்கள் காசிக்குப் போய் வந்தோம் அவ்வாறு போய்வந்தவர்கள் இராமேசுவரத்துக்கும் போக வேண்டுமென்று, எங்கள் வீட்டில் வற்புறுத்தியதால், அங்கு சென்றோம். அனைத்துத் தீர்த்தங்களிலும் ஆட ஆளுக்குப் பதினைந்து ரூபாய் வாங்கிக்கொண்டு, ஒரு கிழவர் முறைப்படி விவரம் சொல்லி, நாங்கள் 'புனித நீராட' அமைதியாக அனைத்தும் செய்தார். பிறகு இராமனாதசாமி திருமுன், அருச்சனை செய்யப்போனோம். கூட்டம் அதிகமில்லை. அருச்சகர் தட்டை வாங்கினார். என்னையே பெயரையும் நட்சத்திரத்தையும் சொல்லச் சொன்னார். அவர் ஏதும் வாய் திறக்கவில்லை. யாரோ வடநாட்டவர் வசதி மிக்கவர்கள் போல் வரக் கண்ட அவர் அவசரமாகத் தேங்காயை உடைத்துத் தந்துவிட்டு, அந்தப் பக்கம் போய்விட்டார். இதற்குப் பெயர் 'பரமார்த்த பூஜையாம்.'

நம் வீடுகளில் 'தடிய பூசாரி' என்று திட்டுவார்கள். அந்த ஆளை நினைக்கும்பொழுதெல்லாம், இவ்வாறு மக்கள் திட்டுவது ஏன் என்பதன் பொருள் விளங்கியது. நான் அடைந்த ஆத்திரத்திற்கு அளவில்லை.

மதுரையில் தெற்கு ஆவணிமூல வீதியில் போய்விட்டாலும், துணிக்கடைகள் மிகுந்த கடை வீதிப்பக்கம் போனாலும் 'இங்கே வாங்க வாங்க' என்று மொய்ப்பார்கள். அதே நிலைதான் பழனி போலும் திருத்தலங்களிலும் காணப்படும். 'ஏண்டா இப்படிச் சாமி கும்பிட வந்தோம்' என்று வருந்தி அழத் தோன்றும்.

திருமூலர் முதல் வள்ளலார்வரை, திருக்கோயில் வழிபாட்டைச் சீர்திருத்த முயன்றார்கள். எல்லாவற்றையும் இந்த 'உயர் சாதிக்காரர்கள்' எனக் கூறிக்கொள்ளும் பூசுரர்கள் பாழடித்துவிட்டார்கள். திரு.வி.க. அவர்கள் கோயில்களில் நிதி

சேரக்கூடாது என்றார்; நிதி சேர்ந்தால் அந்த இடத்தில் நீதி இராது போய்விடும் என்றார். ஆனால் மக்களின் பக்தியை முதலீடாக்கிப் பணம் குவிக்கும் கூட்டத்தைக் 'கோயிற் பூனைகள்' என்று கோவை கிழார் இராமச்சந்திரன் செட்டியார் ஒரு நூலே எழுதினார்.

ஆனால் இன்று இந்தக் கொடுமை பல்கிப் பெருகிப் படுமோசமாகி, கோயில்கள் எல்லாம் நாகரிகமாகக் கொள்ளையடிக்கும் கூட்டத்தவர்களின் உறைவிடம் போலாகிவிட்டது.

எனவே இன்றைய நிலையில் திருக்கோயில் வழிபாட்டில், செய்யத்தக்க சீர்திருத்தங்கள் பற்றிச் சிந்திக்கவேண்டும்.

ஒரு சிலரேனும் மனவுறுதியோடு முன் வந்தாலல்லாமல், தமிழ் மக்களின் 'பக்தி இயக்கமே' தமிழரையும் அழித்து, தமிழையும் அழித்துவிடக்கூடும். எனவே எல்லோரும் இதுபற்றித் திறந்த மனத்துடன் சிந்திப்போம், வாருங்கள் என அழைக்கின்றேன்.

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

ஆறுமுகநாவலரின் பதிப்புப்பணி

வெ.இராமச்சந்திரன்,
ஆய்வாளர், சென்னை.

19 - ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆறுமுக நாவலரின் சமகாலப் பதிப்பாசிரியர்களின் பட்டியலையும் அவர்தம் படைப்புகளையும் மயிலை சீனி வேங்கடசாமி தொகுத்து அளித்தவாறு ஒப்பு நோக்குவோம்.

பதிப்பாசிரியர்	உரைநூல்	பதிப்பித்த இடம்	ஆண்டு
இராமானுசக்கவிராயர்	திருக்குறள் பரிமேலழகர் உரை	சென்னை	1840
கந்தசாமி ஐயர்	நைடதம்உரை	"	1842
சரவணப்பெருமாள் ஐயர்	வாக்குண்டாம் நல்வழி உரை	"	1859
மயிலை சண்முகம்பிள்ளை	தஞ்சைவாணன் கோவை சொக்கப்பநாவலர் உரை	"	1843
கோவிந்தபிள்ளை	வில்லிபாரதம் (சபாபர்வம் உரை)	"	1868
தி.ஈ.சீனிவாச ராகவாச்சாரியார்	நளவெண்பாஉரை	"	1870
	சிலப்பதிகாரம் உரை		1875
	புகார்க்காண்டம் உரை பதிப்பாசிரியர் உரை	"	
சுப்பராய செட்டியார்	சிலப்பதிகாரம்	"	1872
	பழமொழிநானூறு பதிப்பாசிரியர் உரை	"	1874
வாசுதேவ முதலியார்	நான்மணிக்கடிகை கோ.இராசகோபால் பிள்ளை உரை	"	1879
சிதம்பரகவி	கூர்மபுராணம் உரை	"	1883" (9)

நாவலர் பதிப்பித்த நூல்கள்:

நாவலர் பதிபித்த நூல்களை ஐந்து வகையாகப் பகுத்துக் கொள்ளலாம். "ஆறுமுக நாவலர் பரிசோதித்தும் புத்துரையாத்தும், புதியதாய் எழுதியும் வெளியிட்ட நூல்கள் ஐம்பத்தொன்று. அச்சிற்பதிப்பிக்கும் பொருட்டு எழுதி முடித்தவைகள் பத்து. எழுதத் தொடங்கியவைகள் ஒன்பது; அவைகளுள் பாலபாடம், சைவவினாவிடைகள் பெரிய புராண திருவிளையாடற் புராண வசனம், நாவலர் பிரபந்தத்திரட்டு, (காண்டங்கள்) பெரியபுராண சூசனம் ஆகியவை சிறப்பிடம் பெற்று அமைந்துள்ளன. தமிழ்கற்றவர் வியந்து போற்றும் வண்ணம் அமைந்தது ஆறுமுக நாவலர் கைப்பட்டுத் திருத்திய விவிலிய மொழி பெயர்ப்பாகும்" (10)

பதிப்பு என்றால் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்தலேயாகும். அவ்வகையில் ஆறுமுக நாவலர் 1849 ஆம் ஆண்டு சென்னைக்கு வந்து முதல் முதலாகச் சூடாமணி நிகண்டு உரையையும் சௌந்தரிய லகரி உரையையும் அச்சிட்டுப் பதிப்பித்து வெளிப்படுத்தினார். அடுத்து, நல்லூரிலிருந்த அச்சகத்தைவண்ணை சிவன் கோவிலின் தெற்கிலுள்ள மத்திலே நிலை பெறச் செய்தார். இங்கு, நன்னூல் விருத்தியுரை, திருச்செந்தூர் யமகவந்தாதி திருமுருகாற்றுப்படை என்பனவற்றிற்கு நாவலர் தாம் எழுதிய உரைகளுடன் 1852 இல் அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார். ஆறுமுக நாவலர் இராமநாதபுர சமஸ்தானம் திரு.பொன்னுசாமித் தேவர் அவர்களின் விருப்பத்திற்கிணங்கவும் அவருடைய பொருளுதவியைக் கொண்டும், திருவாசகம், திருக்கோவையார் முதலிய நூல்களின் மூலத்தை மட்டும் 1859 இல் செம்மையாக அச்சிட்டுப் பதிப்பித்தார். பொன்னுச்சாமிதேவர் அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய பாண்டித்துரைத் தேவரின் தந்தையார் என்பது நினைவுகொள்ளத் தக்கது.

1864-66 இல் கந்தபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், சேதுபுராணம் முதலியவற்றை இவர் எழுதி அச்சிட முற்பட்டார். ஆனால் இவை இவரது காலத்திற்குப் பின் முழுமையாய்ப் பதிப்பிக்கப்பட்டன. திருவாவடுதுறை ஆதீனத்தின் விருப்பத்திற்கிணங்கவும் அவர்களது

பொருளுதவியைக் கொண்டும் மேற்படி ஆதீனத்தின் ஆதரவில் இயற்றப்பட்ட இலக்கணக்கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி, தொல்காப்பியச் சூத்திர விருத்தி என்பனவற்றையும் பரிசோதித்து நாவலர் 1899 இல் பதிப்பித்து வெளியிட்டார். மேலும், நன்னூல் விருத்தியுரை, நைடதவுரை, திருவிளையாடற் புராணம், நன்னூல் காண்டிகையுரை முதலியவற்றையும் திருத்தினார்.

எனவே, மேற்கூறியவற்றால் ஆறுமுகநாவலர், அவர்தம் காலத்தில் விளங்கியிருந்த பழந்தமிழ் நூல்களைப் பிழையற்ற செம்பதிப்பாகப் பதிப்பித்தமை இவற்றால் உறுதிப்படுகின்றது. இவற்றைத் தவிர, சுன்னாகம்முத்துக் குமாரக் கவிராயர் இயற்றிய ஞானக்கும்மியை நாவலர் நன்கு பரிசோதித்து சி.விநாயகமூர்த்திச் செட்டியார் பெயரால் 1852 இல் அச்சிட்டார். பின்னர் கிறித்துவ உபதேசியாரது "சைவதூஷ்ணத்" திற்கு மறுப்பாக 1853 இல் வக்கிரதண்டம் என்னும் துண்டு வெளியீட்டை அச்சுப்படுத்தினார். கிறித்துவர்களது 'சுப்பிரமணிய தூஷணத்'திற்கு எதிராக சுப்பிரமணிய போதம் என்னும் நூலை எழுதி வெளியிட்டார். 1854 இல் 'சைவ தூஷண பரிகாரம்' என்னும் நூலையும் எழுதி அச்சுப்படுத்தினார்.

1873 இல் சைவ வினாவிடை இலக்கணச் சுருக்கம், சிவஞான போதச் சிற்றுரை சிவராத்திரி புராணம் முதலிய நூல்களை நாவலர் எழுதி வெளியிட்டார். 1874 ல் இலங்கை பூமிசாத்திரம் என்னும் நூலை எழுதி வெளியிட்டார். 1875-78 இல் நல்லூர் கந்தசுவாமி கோயில் திருத்தங் கருதி 1875 இல் இருபத்திரிகைகளையும் 'மித்தியா வாத நிரசனம்' என்பதையும் எழுதி இவர் வெளியிட்டார்.

1852 இல் நாவலர் பதிப்பித்து வெளியிட்ட பெரிய புராண முகவுரையில் "பெரிய புராணம் என்று வழங்குகின்ற திருத்தொண்டர் புராணம்; இஃது சைவ சமயிகளுள் கற்றோரும் மற்று யாவருக்கும்

> சாதாரணமாய் உபயோகம் ஆகும் பொருட்டு,
> யாழ்ப்பாணத்திற் சைவப்பிரகாச வித்தியா சாலைக்கதிபதியாகிய
> நல்லூர் ஆறுமுக நாவலரால் கத்திய ரூபமாகச் செய்து,
> பரிதாபி வருடம் சித்திரை மீ தமது வித்தியாபாலு யந்திர
> சாலையில் அச்சிற்பதிப் பிக்கப்பட்டது" (11) என்பார்.

நாவலர் தமது பதிப்பில் மிகச் சிறிய பிழையும் நேர்ந்துவிடக் கூடாது என்று கண்ணும் கருத்துமாக இருந்தார். நாவலர் பதிப்பு, நல்ல பதிப்பு என மக்கள் போற்றினர். இவரது பதிப்பில் நூலைப் பற்றிய வரலாறு, ஆசிரியர் பற்றிய விளக்கம், ஏடுகளின் நிலை. ஆராய்ச்சி முன்னுரை எதுவும் காண முடியாது. தேவையான இடங்களில் மிகச்சிறிய விளக்கங்களை அடிக்குறிப்பாகத் தந்தார். சான்றாகத் திருவிளையாடற் புராணம் - வசனம் என்ற நூலில் அடிக்குறிப்பாக முனிவர்களின் பெயர்களாகிய அகத்தியர், வியாசர், நாரதர், சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், கௌதமர், பராசரர், வாமதேவர், வான்னீகர், வசிட்டர், சுகர் என்பவர்களைக் குறிப்பிடும்போது, வான்மீகர் என்று எழுதியமைக்கு "வான்மீக ரெனினும், வான்மீகி யெனினும் வான் மிகியெனினும் பொருந்தும்" (12) என்பார்.

எனவே, "தமிழ் நூல்களைப் பிழையில்லாமலும் திருத்தமாகவும் அழகாகவும் முதன்முதல் அச்சிட்ட பெருமை நாவலரையே சாரும் என்பதும், நாவலர் பதிப்பு என்பது இன்னும் தனி மதிப்புடையதே" (13) என்னும் கூற்று சாலப் பொருத்த முடையதே என்பது இவரது பதிப்பின் தன்மையால் வெளிப்படுகிறது. அவர் பதிப்பித்த நூல்களில் நாம் மற்றொரு வேறுபாட்டையும் காண முடிகிறது. தமக்குச் சிறந்தது என்று தோன்றியதை பாடவேறுபாடு, உரைவேறுபாடு என்று பாராமல் அதைப்பற்றியும் குறிப்பிடாமல் பதிப்பித்தமையே இவரது பதிப்பின் தனித்தன்மையாகும். திருத்தொண்டர் புராண சூசனம், திருவிளையாடற்புராணம் - வசனம் பெரியபுராணம் - கத்தியரூபம் (உரைநடைவடிவம்) ஆகிய நூல்கள் இவற்றிற்குச் சான்றாக அமைகின்றன. மறைமலையடிகள் ஆறுமுக நாவலரது பதிப்புப் பணியின் மேன்மையை அறிந்தவராய் விளங்கினார். நாவலரது பதிப்புப் பணியினையும், இலக்கண இலக்கிய நூல்களின் பால் அவருக்கிருந்த புலமையின் திறத்தையும் மறைமலையடிகள் பின்வருமாறு கருத்துரைக்கின்றார்.

"இலக்கண இலக்கியப் பிழைகளும் அச்சுப் பிழைகளும் இல்லாமல் உயர்ந்த தமிழிலக்கண இலக்கிய நூல்களையும், சைவசமய நூல்களையும் பதிப்பித்துதவுவார் அரியரான எமது இளமைக்காலத்திலே ஆறுமுக நாவலரவர்களே, அந்நூல்களைப்

பிழையறப் பதிப்பித்து உதவினவர்கள். எழுத்துச் சொல்லாராய்ச்சிக்கு நாவலரவர்கள் தாம் நான்னூலுக்குச் சேனாவரையர் வரைந்த சொற் பொருட்டிறம் வாய்ந்த வுரையும் அவர்களாற் பதிப்பித்து வெளியிடப்படாவிடில் எம் போன்றோர் அஞ்ஞான்று தமிழிலக்கணவறிவு பெறுதல் இயலாமலே போயிருக்கும்" (14)

நாவலரின் இலக்கிய நோக்கு:

தமிழ்மொழியின் பால் தளராத பற்றும், தமிழ் இலக்கண இலக்கியத்தின் மீது மிகுந்த மதிப்பும் கொண்டிருந்த நாவலரின் இலக்கிய நோக்கு மிகவும் போற்றுதற்குரியதாக அமைந்திருந்தது . மேலும், ஆங்கில அறிவின் காரணமாக ஆங்கிலேயர்கள் தம் மொழியின்பால் கொண்டிருந்த பற்றுதலைப் போலவே, தாமும் தம் தமிழ்மொழியின்பால் கொண்டிருந்த பற்று மிகவும் மிகுதியாக இருந்தது, அவர் தாம் வெளியிட்ட திருக்கோவையார் பதிப்பின் அனுபந்தத்தில்.

"முற்காலத்தில் உள்ள மகிமை பொருந்திய அளவில்லா தலைகள் அச்சிற்பதிப்பிக்கும் வழக்கம் இல்லாமையால் இறந்துபோயின. இறவாது இக்காலத்தில் எஞ்சியிருப்பவைகளும், கையெழுத்துப் பிரதிகளிலே எழுத்தும் சொல்லும் மிகுந்தும் குறைந்தும், பிறழ்ந்தும், திரிந்தும் பலவாறு பிழைபட்டனவாய் சிலவிடங்களில் மாத்திரம் அருகிவழங்குகின்றன. யாவருக்கும் எளிதில் பயன்படும் பொருட்டு முக்கியமாய் உள்ள நூல்களையும் உரைகளையும் பலவிடங்களினின்றும் வருவிக்கப்பட்ட பலபிரதிகளைக் கொண்டு ஒருவாறு பரிசோதித்து அச்சிற் பதிப்பித்து பிரகடனஞ் செய்ய வேண்டும். கல்விப் பொருளோடு செல்வப் பொருளும் ஒருங்குடைய மகிமை பொருந்திய மடாதிபதிகளும் பிரபுக்களும் நமது தமிழ்நாட்டிலும் தமிழ் பாஷையிலும் அபிமானம் உடைய வர்களாகித் தங்கள் தங்களால் இயன்ற உதவி செய்து இம்முயற்சிகளை நிறைவேற்றுவீர்களாயின் நமது நாட்டிலே எம்மொழியிலும் இனிய நமது தமிழ் மொழி வளர்ந்தோங்கும்" (15)

முடிவுரை:

இவ்வாறாக, ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்து தமிழ்நாட்டிலே தங்கியிருந்து அச்சு இயந்திர சாலையை ஆங்கிலேயர்களுக்கு எதிராக நிறுவி அரிய தமிழ் நூல்களை பிழையில்லாச் செம்பதிப்பாக அச்சிட்டு வெளிப்படுத்தினார். இவருடைய இச்செயல் பிற்காலத்தில் வந்த தமிழ்ப் பெருமக்கள் பலர் நூல்கள் பதிப்பிப்பதற்கு வழிகாட்டுதலாயும் முன்னோடித்தன்மை பெற்றனவாயும் விளங்கின. நாவலரால் தொடங்கப்பட்ட இப்பணி பலராலும் தொடரப்பட்டு அரிய நூல்கள் செல்லுக்கிரையாகா வண்ணம் காப்பாற்றப்பட்டன. நாவலரது இம்முயற்சி ஈழத்தவர்களை மட்டுமன்றி இந்தியத் தமிழ்நாட்டவரையும் ஈர்த்தது. நாவலர் காலத்தின் பின்னர் பதிப்பாசிரியர்கள் எனப் புகழ்பெற்ற பலர் இப்பணிகளைத் தொடர்ந்து நடத்தினர்.

ஆறுமுக நாவலரது பதிப்புப்பணி பதிப்புத்துறையில் முன்னோடியாகவும் பின்வந்த தமிழ்ப்பதிப்பாளர்களுக்கு முன்னேற்றமாகவும் தமிழ்மொழிக்குப் புத்துயிர் அளித்தனவாயும் இருந்தன என்றால் அது மிகையாகாது.

அடிக்குறிப்புகள்

1. பதிப்புச் சிந்தனைகள், விநாயகமூர்த்தி அ., ப.50
2. உ.வே.சா.காப்பியப் பதிப்புகள், முனைவர் காசிராசன், ப.22
3. உரையாசிரியர்கள், அரவிந்தன், மு.வை. ப.714
4. நாவலர் மாநாட்டு விழா மலர், கணபதிப்பிள்ளை, மு.ப.19
5. நாவலர் பதிப்புப்பணியும், கணபதிப்பிள்ளை.மு. ப.132
6. உரையாசிரியர்கள், அரவிந்தன் மு.வை. ப. 765
7. மேலது ப.765
8. ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு கைலாசப்பிள்ளை, ப.95–97
9. உரையாசிரியர்கள், அரவிந்தன். மு.வை. ப.719
10. அச்சும் பதிப்பும், சம்பந்தன்.மா.சு. ப.190
11. நாவலரும் பதிப்புப் பணியும், கணபதிப்பிள்ளை.மு., ப.20
12. திருவிளையாடற்புராணம் – வசனம், ஆறுமுக நாவலரவர்கள், ப.20
13. அச்சும் பதிப்பும், சம்பந்தன். மா.சு. ப.189
14. தமிழ் மக்களின் பெருங்கடமை, மறைமலையடிகள், ப.103
15. நாவலர் வழியில் தமிழறிஞர், யோகேஸ்வர் கணேசலிங்கம், ப.10

திருவெம்பாவை 16

பேராசிரியர் கப. அண்ணாமலை

அருள் அனுபவம்

பாவை நோன்பு மேற்கொள்ளும் மகளிர், நாடு குளிர மழை பொழிய வேண்டும் என்று மேகத்தை வேண்டுகின்றனர். இவ்வேண்டுகோளை, அருள் வேண்டும் என்று வேண்டு வதாகவும் பொருள்படுமாறு மணிவாசகர் பாடுகிறார்.

இறைவனின் அருளுக்கு உருவம் அம்பிகைதான். "அருளது சத்தியாகும்", மணிவாசகர் மேகத்திற்கு அம்பிகையை உவமையாக்கி, மழை பொழியும்படி மேகத்தையும், அருள் பொழியும்படி அம்பிகையையும் வேண்டுகிறார்.

'மேகமே, நிறைந்து கிடக்கும் கடலைப் பருகி, அம்பிகையின் திருமேனிபோல் கறுகறுவென்று ஆகாய வீதியில் எழுந்துவா'

"முன் இக்கடலைச் சுருக்கி எழுந்து, உடையாள்
என்னத் திகழ்ந்து" என்பது

'ஞானவறுமைப்பட்ட எனக்கு, அம்பிகையே, உன் தரிசனம் வேண்டும். அதனால் என்பிறவிக்கடல் சுருங்க வேண்டும்' என்றும் இரு பொருள்படும். உலகமாயை கொஞ்சமன்று, கடல் போன்றது. அதை அம்பிகைதான் வற்றவைக்க முடியும்.

கருமேகக் கூட்டம் வானவெளியைக் கவ்விக்கொண்டு நின்றால், அம்பிகை தரிசனம் சிதாகாசத்தைக் கவ்விக்கொண்டு நிற்பதன்றோ.

கடகடவென்று இடியிடிக்கிறது மேகம்; அம்பிகை திருவடியில் 'கலீர், கலீர்' என்று பெருமுழக்கம் செய்கிறது சிலம்பு.

"எம்பிராட்டி திருவடிமேல் பொன்னஞ் சிலம்பின் சிலம்பி"

வேதமே சிலம்பு, மறையின் ஓசை சிலம்பின் வெளிவடிவம்; மறையின் பொருளாக அன்பரின் மனத்தில் விளங்குபவள் - அவர்களின் உயிரில் சோதியாய் நிற்பவள் - அம்பிகை.

மேகப் போர்க்களத்தில் வில் வளைந்துவிட்டது. அதுவே வானவில். இந்தவில் அம்பிகையின் திருமுகத்தில் உள்ள புருவம் போல் உள்ளதாம்.

"திருப்புருவம் என்னச் சிலைகுலவி"

கீறிச்செல்லும் மின்னல் அம்பிகையின் இடையை நினைவுபடுத்துகிறது. எப்போதும் தோன்றும் புருவத்தின் அழகிற்கு வானவில்லையும், உண்டோ இல்லையோ என்ற இடைக்கு மின்னலையும் ஒப்புமை கூறுவது ஒரு நயம்.

கருமேகத்தின் இடையே மின்னலைப் பார்ப்பது ஒரு தனி அனுபவம். அந்த அழகை மணிவாசகர் "மின்னிப் பொலிந்து" என்ற தொடரால் குறிப்பிட்டு, அம்பிகை தரிசனம் எத்தகைய அனுபவம் என்பதையும் உணர்த்தி விடுகின்றார்.

'சோ' என்று கொட்டும் மழை, அம்பிகை வழங்கும் அருளை மணிவாசகருக்கு நினைவுபடுத்துகின்றது. அம்பிகையைப் பிரியாதவன் இறைவன். ஆதலால் அவனைச் சதாசிவன் என்பர். இந்த மூர்த்தி தான் அன்பர்க்கு அருள் வழங்கி வீடு பேற்றை அளிப்பவன். வீடுபேறு பெறுவதற்கு ஏங்கும் அன்பர்களின் ஞானானுபவ வேட்கையையும் இறைவனைப் பிரிந்து வருந்தும் துயரத்தையும் அம்பிகையின் தாயுள்ளம் முதலில் தெரிந்து கொண்டு விடுகிறது. அவள் அருள்வழங்கி விடுகின்றாள்.

"தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருள்"

அம்பிகையின் அருளைப் பெறும் சிவனடியார்களை 'அன்பர்க்கு' என்று பொதுவாகவும், சிவனைக் காதலனாகக் கொண்ட தம்மை ஒத்த காதலிமார்களை 'நமக்கு' என்று சிறப்பாகவும் மணிவாசக நாயகி குறிப்பிடுகின்றார்.

அடியார்களின் குறை எதையும் அம்பிகை பார்ப்பதில்லை. தாயே என்று அவள் சந்நிதியில் மனங்குழைந்து நிற்பவருக்கெல்லாம் அவள் அருள்கொட்டும் மழை போலே தாராளமாகக் கிடைக்கிறது.

வீடுபேறு பெறும் பக்குவத்தைச் சைவசமயத்தில் மூன்று நிலைகளாகக் காட்டுவர். அவை, இருவினை ஒப்பு, சக்தி-நிபாதம், மல-பரிபாகம் என்பவை. மணிவாகர் இப்பாடலில் கூறுவதுபோல, அடியார்க்கு அம்பிகையின் அருள், முன்னதாகக்

கிடைத்தலைச் 'சத்தி நிபாதம்' என்பர். சத்தி என்பது அருள் நிபாதம் என்பது வீழ்ச்சி. அருள் வீழ்ச்சி அருள் மழையே யன்றோ? அதனை மழைக்கு உவமைகூறியது எவ்வளவு பொருத்தம்.

இங்ஙனம் அருளைப் பெறும் அனுபவத்தை – அந்த அருளில் அழுந்தி, வாழ்க்கையை அருளின் துணைகொண்டு நடத்தி, செய்யும் செயல்களையெல்லாம் தனிப்பெருங் கருணையோடு செய்து, அந்த அருளை அனுபவிப்பதை 'அருள் அனுபவம்' என்பார் வள்ளலார். மணிவாசகர் திருவெம்பாவைப் பாடல்களில், இதை 'அருள் நீராடல்' என்று உருவகப்படுத்துகின்றார். இதற்கு ஒரு வெளிப்புற அடையாளந்தான் மகளிர் பொய்கையில் நீராடுவது.

மற்றும், மணிவாசகர் தாம் பெற்ற அருள் அனுபவத்தை திருவெம்பாவைப் பாடல்களில் வெளியிடுகின்றார்.

பாடல்:

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்!

பாராட்டியுரைப்பது சேவையா? தேவையா?

முனைவர் அ.சிவக்கண்ணன்

ஒருவர் ஆற்றிய நல்ல செயலை நன்றியோடு நினைத்துப் பார்ப்பதும் அதுபற்றி அவரிடமே பாராட்டியுரைப்பதும் மனித நாகரிகத்தின் அடையாளம்.

குதிரைவண்டிக்காரன்கூட தன் குதிரை வேகமாக ஓடினால் அதைத்தட்டிக் கொடுத்துப் பாராட்டுகிறான். குதிரைக்குக்கூட தன் எசமானனது பாராட்டு மகிழ்ச்சியளிக்கிறது. இன்னும் வேகமாக ஓடுகிறது.

தங்களுடைய வளர்ப்புநாய் அறிவோடு நடந்துகொண்டால் அதை மடியில் தூக்கிவைத்துக் கொண்டு கொஞ்சுகிறார்கள் அதை வளர்ப்பவர்கள். நாய் அந்தப்பாராட்டை மகிழ்வோடு ஏற்றுக்கொண்டு மேலும் அறிவோடு நடந்துகொள்ள முயல்கிறது. ஆனால், இப்படி மிருகங்களைத் தட்டிக்கொடுத்துப் பாராட்டுபவர்கள் மனிதர்களைப் பாராட்டத் தயங்குகிறார்கள். இவர்களை 'ஈர்ங்கை விதிரார்' என்பது போல பாராட்டுக்கருமிகள் எனலாம். ஒருவகையில் இவர்கள் 'மனநோயாளிகளே!' இவர்களுக்கு ஒரு பாராட்டுச் சொல்லில் அடங்கியிருக்கும் சக்தியின் மகத்துவம் புரிவதில்லை.

அலுவலகத்திலிருந்து களைத்துப்போய்க் கணவன் வீடு திரும்புகிறான். மனைவி தான் புதிதாகக் கற்றுக்கொண்ட சிற்றுண்டியை ஆசையாகத் தயாரித்து அன்போடு பரிமாறுகிறாள். சாப்பிட்டு முடித்த கணவனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவனோ எதுவுமே சொல்லாமல் எந்த உணர்ச்சியுமில்லாமல், வெளியே போய்விட்டு வருவதாகச் சொல்லி விட்டுப் போய்விடுகிறான். அவள் எதிர்பார்த்த தெல்லாம், "அடடே! நல்லாயிருக்கே; எப்பக்கத்துக்கிட்டே" என்கிற ஒரு சில வார்த்தைகள்தான். அது கிடைக்காததன் விளைவு அடுத்தாற்போல் கணவனுக்கு வழக்கம்போல் இட்லிதான்.

அந்த அலுவலகத்தில் புதிதாக வேலைக்குச் சேர்ந்திருக்கும் இளைஞன் அவன். மேலதிகாரி அவனிடம் ஒப்படைத்த அதிகப்படியான வேலைகளை அன்றிரவு அலுவலகத்தில் வெகுநேரம் தங்கி முடித்துவைக்கிறான். மறுநாள், தான் முடித்துவைத்த வேலைகளை மேலதிகாரியிடம் காட்டி, என்ன சொல்வாரோ என்று எதிர்பார்த்துநிற்கிறான். அவரோ, ஒரே வரியில், "அப்படி வைத்துவிட்டுப்போ" என்கிறார். அப்போது அந்த இளைஞனின் முகத்தைப் பார்த்திருக்கிறீர்களா?

"சொன்னபடியே முடித்துவிட்டாயா? இப்படித்தான் சுறுசுறுப்பா இருக்கணும்" என்று சொல்லியிருந்தால் அவன் இறக்கை இல்லாமலே வானத்தில் பறந்திருப்பான். எந்தப்பாராட்டு வார்த்தையும் அவனைத் தொடாததால், இனி அவன் அதிகவேலை கொடுத்தால் மகிழ்ச்சியோடு செய்ய மாட்டான். வேலைத்திறனும் குறையும்.

பூமி மழைக்கு ஏங்குகிறது. குழந்தைபாலுக்கு ஏங்குகிறது. மனித மனம் பாராட்டுக்கு ஏங்குகிறது. பாராட்டுச் சொல் ஒரு மாமந்திரம். சோனியைக்கூட பலசாலியாக்கும். கோழையை வீரனாக்கும்.

மற்றவர்களைப் பாராட்டுவது இருக்கட்டும். நீங்கள் உங்களையே உங்களுக்குள் பாராட்டிப் பாருங்கள். நீங்கள் எப்போதோ செய்த சாதனையை அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் நினைத்துப் பாருங்கள். இதைச் செய்ய முடிந்த நம்மால் இதற்கு மேலும் செய்ய முடியுமென்று உங்களை நீங்களே தட்டிக்கொடுத்துக்கொண்டு செயல்படுங்கள். வெற்றி நிச்சயம். இதை உளவியலாளர் *Auto Suggestion* என்கிறார்கள்.

'மணிக்கொடி' எழுத்தாளராகிய வ.ரா.வைச் சுற்றி எப்போதும் எழுத்தாளர் கூட்டம் ஒன்று இருக்குமாம். வளரும் எழுத்தாளர்களை மனம் விட்டுப் பாராட்டி அவர்களை ஊக்குவிப்பதால் அவருடைய ஆதரவான மொழியைக் கேட்கும் போதெல்லாம் அவர்களில் ஒவ்வொருவருக்கும் தாம் பெரிய எழுத்தாளர்தான் என்ற தன்னம்பிக்கை ஏற்படுமாம்.

பாராட்டுப்பெறும் ஒருவருக்கு தாமும் மற்றவரைப் பாராட்டவேண்டும் என்கிற உணர்வு ஏற்படும். இதனால் மனிதர்கள் ஒருவருக்கொருவர் நெருங்கியவர்களாகிறார்கள். மேலும் மேலும் பாராட்டுக்களைக் குவிக்க ஊக்கத்துடன் செயல்படத் தூண்டப்படுகிறார்கள். பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பாராட்டி வளர்க்கத் தவறுவதாலேயே குழந்தைகளின் செயல்திறன் குறைகிறது.

சிலர், தங்களை மட்டுமே மற்றவர்கள் பாராட்ட வேண்டும் என்று நினைப்பார்கள். மற்றவர்களைப் பாராட்டுவது என்பது இவர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனையாகக் கருதுவார்கள். வாய்ப்புக்கிட்டும் போது ஒருவரைப் பாராட்டாமல் விட்டுவிடுவது இந்த நூற்றாண்டின் அநாகரிகம் எனலாம். சிலரோ பாராட்டாமல் விட்டுவிடுவதோடு பழிதூற்றவும் செய்வார்கள். இவர்களைக் கற்காலத்து குகை மனிதர்களோடுதான் ஒப்பிட வேண்டும். எனவே பரஸ்பர பாராட்டு - அது உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து வருமானால் - மனிதகுல சேவை மட்டுமல்ல - கட்டாயத் தேவையும்கூட.

என்ன?... நன்றாகத்தான் சொல்கிறேன் என்கிறீர்களா? அப்படியானால் நிச்சயமாக இனிமேல் இன்னம் நன்றாகச் சொல்வேன்.

சொற்கள் பொருள் உணர்த்தும் முறை

முனைவர் தெ. மேகநாதன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

உலக உயிரினங்களுள் குரல் ஒலியை மொழியாக்கிப் பேசுந்திறன் மக்கள் இனத்திற்கு மட்டுமே வாய்க்கப் பெற்ற பெரும் பேறாகும். மக்களால் படைக்கப் பெற்ற மொழி அவர்களால் ஆக்கமுற்று வளர்ந்து அவர்களுக்கு அறிவாகவும் அறிவுத் துணையாகவும் அமைந்து விளங்கும் ஓர் அருவப்பொருளாகும்.

உலகப் பொருள்களுள் மொழியோடு தொடர்புடையது மக்களினமே. இம்மக்களினம் மொழியால் நாளும், நாளும் உயர்ந்துவருகிறது. எனவே இவ்வாறு உயர்ந்து வரும் மக்களினத்தை உயர்திணை என்றும் உணர்வதற்கு வாய்ப்பில்லாதவற்றை அஃறிணை என்றும் இரு கூறுகளாகப் பிரித்துத் தமிழ் நூலார் சொல்லிலக்கணத்தை வகுத்த மைத்துள்ளனர். அச்சொல்லிலக்கணத்தில் தனிமொழி எவ்வாறு பொருள் உணர்த்தும் தொடர்மொழி எவ்வாறு பொருள் உணர்த்தும் என்பது இங்கு சிந்தித்தற்குரியது.

தனிமொழி பொருள் குறித்தல்

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"[1] என்ற நூற்பாவிற்கு உரை எழுதும் சேனாவரையர் தனிமொழிகளில் அசைநிலை (மியா, மோ போன்ற முன்னிலை அசைச் சொற்கள் கேண்மியா, கேண்மோ, பொருள் உடையனவா என்ற ஐயத்தை நீக்கவே இந்நூற்பா துணை செய்கின்றது என்பர். இக்கருத்தின்படி அசைநிலை முதலியனவும் பொருள் குறித்து நிற்கும் என்பது பெறப்படுகின்றது.

நச்சினார்கினியர் அசைநிலையும் இசை நிறையும் (இரண்டும் இடைச்சொற்கள்) எப்படிப் பொருள் உணர்த்துகின்றன என்பதைத் தாஞ்சார்ந்த சொற்களின் பொருளை உணர்த்தியும் அச்சொற்களை அசைத்து நிற்றலின் அசைநிலையும் பொருள் குறித்தனவேயாம் என்பார். சொற்கள் ஓசை நிறைந்து நின்றே பொருள் உணர்த்த வேண்டுதலின் இசைநிறையும் பொருள் உணர்த்திற்றேயாம்"[2] என்று விளக்குகிறார்.

அவர்தம் விளக்கத்தில் நாம் அறிய வேண்டிய ஒன்று உள்ளது. அசைநிலை தனக்கெனப் பெற்றிருக்க வில்லை என்பதை ஒப்புக் கொள்கிறார். ஆனால் அசைநிலைகள் சொற்களை உச்சரிப்பதற்கு எளிமைப்படுத்துகிறது என்பதை,

"அச்சொற்களை அசைத்து நிற்றலின் அசைநிலை என்று கூறியுள்ளார். இசை நிறையும் சொற்களை எளிமையாக உச்சரிப்பதற்குப் பயன்படும் என்பதே நச்சினார்க்கினியர் கருத்து. அசைநிலை பேசுவோரின் உணர்ச்சியைக் காட்டுவதற்கு உணர்ச்சிப் பொருளாக உதவும் என்பது பொருத்தமாகும்.

சேனாவரையரும், நச்சினார்க்கினியரும், மொழியில் வழங்கும் எல்லாத் தனிச் சொற்களுமே பொருள் உடையன என்ற கருத்துடையவர்களாக விளங்குகின்றனர். இளம்பூரணர் தனிவிளக்கம் ஏதும் தரவில்லை எனினும் இவர்கள் கருத்தை ஆதரிப்பதாகவே கொள்ளலாம்.

எல்லாச் சொல்லும் பொருள் உணர்த்தும் என்ற கருத்தில் சேனாவரையர், நச்சினார்க்கினியர் போல தெய்வச்சிலையாரும், கல்லாடரும் அவ்வளவு அழுத்தம் காட்டுவதாகத் தெரியவில்லை.

தெய்வச்சிலையார் முதலில் நச்சினார்க்கினியர்போல "அவையும் (அசைநிலை, இசைநிரை ஒரு சொல்லடுக்கு) சார்ந்த பொருளைக்குறித்தன என்று கொள்க" அன்றியும் எழுத்தோத்துப் பெரும் பான்மை பற்றி என்றும் கொள்க "இவ்வூர் எல்லாம் கல்வி உடையார்" என்ற வழிக்கல்லாதாரும் சிலர் உளர் ஆயினும் கற்றார் பலர் என்பது குறித்து நின்றாற் போலக் கொள்க"[3] என்பர். கல்லாடரும் தெய்வச்சிலையார் கருத்தையே ஆதரிக்கின்றார்.

"மற்று அசைநிலை, இடைச்சொற்கள் பொருள் உணர்த்தாவால் எனின் அவையும் ஒரு வாற்றான் சிறுபான்மை பொருள் உணர்த்தும் என உணர்க அல்லதூஉம் இது பெரும்பான்மை எனினும் அமையும் என்பது"[4] எனக் கூறுகிறார் இதனால் அவர் தெய்வச்சிலையார் கருத்தை வழிமொழிவதை அறிகின்றோம்.

பேராசிரியர் சுந்தமூர்த்தி அவர்கள் தெய்வச்சிலையார் உரை கழகப்பதிப்பில், பெரும்பான்மை பற்றியது என்று கூறுகிறார். எனினும் இது பொருந்துவதன்று என்று கூறி அசைநிலை

முதலியன கட்டுரைச் சுவைபட வருதலின் பொருள் குறித்தனவேயாம் என்று விளக்கி இசைநிறை, அசைநிலை ஒரு சொல்லடுக்கு என்பனவும் பொருள் குறித்து வரும் என்றதே பொருத்தம் உடைத்தாம் என்று முடிக்கின்றார். சொல்லின் அடிப்படை பொருள் உணர்த்துவது. எனவே அதில் பெரும்பான்மை சிறுபான்மைக்கு இடமில்லை. இக்காரணத்தால் தெய்வச்சிலையார் கருத்துச்சிறப்பானதன்று.

தொடர்மொழி பொருள் குறித்தல்

சேனாவரையர் சொல் தனிமொழி, தொடர்மொழி என இரண்டுவகைப்படும் என்பர். தொடர்மொழிக்கு முயற்கோடு, ஆமைமயிர்க்கம்பலம் என்பனவற்றை எடுத்துக்காட்டாகத் தருகின்றனர்.

முயற்கோடும், ஆமைமயிரும் உலகில் இல்லாத பொருள்கள். எனவே இவற்றை எவ்வாறு பொருள் உடையனவாகக் கருத இயலும் என்ற வினாவை எழுப்பி அவரே மறுமொழியும் கூறுகின்றார்.

"தொடர்மொழிதான் பொருள் குறியாது வருமோ எனின் வாரா. அவைமெய்ப்பொருள் குறிப்பனவும், பொய்ப்பொருள் குறிப்பனவும் என இருவகைப்படும். அவற்றுள் பொய்ப்பொருள் குறிப்பனவும் பொருள் உணர்த்துவனவேயாம். அல்லாக்கால் இல்லோன் தலைவனாக வரும் தொடர் நிலைச் செய்யுள் பொருள் உணர்த்தாமையின் அவையும் புலவராற்கொள்ளப்படா"[5] என்பர் சேனாவரையர்.

இங்குச் சேனாவரையர் தொடர் மொழியின் பொருளை மெய்ப்பொருள், பொய்ப்பொருள் என இருவகைப்படுத்துவதால் தனிமொழி எப்பொழுதும் மெய்ப்பொருள் உணர்த்துகிறது என்று கொள்ளலாம். இதனை விளங்கிக்கொள்ள சொற்பொருளியலார் பொருள் என்பது இரண்டு விதப்பொருளில் பயன்படுத்தப் படுகிறது என்று குறிப்பிடும் விளக்கத்தை அறிதல் வேண்டும்.

வாக்கியங்களும் தொடர்களும் பொருள் உடையனவாகவும் பொருள் அற்றனவாகவும் இருக்கலாம் என்று கூறினாலும் சொற்கள் பொருள் உடையவையல்ல என்று நாம் கூறுவதே இல்லை. இந்த உண்மை எதைக் காட்டுகிறது? பொருள் உடைமை

என்பது இரண்டு அர்த்தத்தில் பயன்படுகிறது. அஃதாவது பொருள் உடையது அல்லது பொருளைக் குறிக்கிறது என்றும், பொருள் உணர்த்துவது என்றும் வேறுபாடு செய்துகொள்ளலாம் இதன்பின்பு தொடரும் வாக்கியமும் பொருளை உணர்த்தலாம், உணர்த்தாமலும் இருக்கலாம்"[6] என்பார் லயன்ஸ். இவ்விளக்கப்படி 'மெய்ப்பொருள்' என்பது பொருளைக் குறிக்கின்றது. பொய்ப்பொருளும் உடையன என்பது முறையே பொருள் உணர்த்தியும் உணர்த்தாமலும் வரலாம் என்ற மொழியியல் கருத்தோடு ஒத்ததாகக் காணப்படுகின்றது.

நச்சினார்கினியர் "முயற்கோடு பொய்ப்பொருளினைக் குறித்ததாம் இல்லையென வருதலான்"[7] என்று மட்டும் விளக்கியுள்ளார். அஃதாவது முயற்கோடு இல்லை என்ற வாக்கியமாக ஆகும்போது பொருள் குறித்து வருகிறது என்பது அவர் விளக்கம். நச்சினார்கினியர் தொடர் மொழி என்பதற்குத் தொகைச் சொல் இரண்டு சொற்கள் சேர்ந்து வருவது என்று மட்டும் பொருள் கொண்டதால் இப்படி விளக்கம் கொடுத்துவிட்டார். உண்மையில் தொடர் மொழி வாக்கியத்தை குறிக்கும் 'முயற்கோடு வாங்கினான்' என்ற வாக்கியத்தை நச்சினார்கினியர் முறையில் எவ்வாறு விளக்குவது? எனவே சேனாவரையர் பொது நிலையில் தந்த விளக்கம் பொருந்துவதாகும்.

கல்லாடர் நச்சினார்க்கினியர் பேச்சைத் தழுவுகிறார். முயற்கோடே இல்லை என்று நல்லவர்கள் பேச்சில் அமைந்து பொருள் உணர்த்திவிடும் என்பது அவர் கூறும் அமைதி. இங்கு யார் எப்படிப் பேசுவார்கள் என்பது சிக்கல் எனவே அவர் விளக்கம் ஏற்றுக்கெள்ளத் தக்கதாக இல்லை.

சொல் பொருள் உறவு

சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள உறவு தனிமொழியைப் பொருத்தவரையில் இடுகுறியானது என்றும் தொடர்மொழியில் காரணக்குறி என்றும் தெய்வச்சிலையார் விளக்கியுள்ளது சிந்தனைக்குரியது.

"தனிமொழி இடுகுறி உறவு உடையது என்பதற்குத் தெய்வச்சிலையார் கூறும் ஒரே காரணம் உலகில் ஒரு பொர்ருளைக் குறிக்க ஒவ்வொருமொழியிலும் ஒரு விதமான

சொல் இருக்கிறது. இந்த வடிவம் இந்தப் பொருளைக் குறிக்க வேண்டும் என்றவரன்முறை எதுவும் உலக மொழிகளில் கிடையாது என்பதுதான்"

"எல்லாச் சொல்லும் எல்லாப் பொருளையும் குறித்து நிற்கும் என்றவாறு எனவே இச்சொல் இப்பொருள் உணர்த்தும் என்னும் உரிமை இல என்றவாறு ஆம் என்னை? உரிமை இல ஆகியவாறு எனின் உலகத்துப் பொருள் எல்லாவற்றையும் பாடைதோறும்தாம் இடுகுறியிட்டு ஆண்டதுணையல்லது இவ்வெழுத்தினான் இயன்ற சொல் இப்பொருண்மை உணர்த்தும் என எல்லாப் பாடைக்கும் ஒப்பமுடிந்ததோர் இலக்கணம் இன்மையான் என்க. எனவே பொருள் பற்றிவரும் பெயர் எல்லாம் இடுகுறி என்பது பெறப்பட்டது. இவ்விடுகுறியான் ஆளப்பட்ட சொல்லோடு ஒட்டி மற்றொரு பொருட்கும் பெயராகிவருவது காரணக்குறியாம்" காரணக்குறி என்பதற்குத் தெய்வச்சிலையார் கூறிய காரணம் சிறப்பானது.

பொன்குடம் என்ற தனிச் சொற்கள் இடுகுறியாக அமைந்தவைதான். ஆனால் பொற்குடம் என்ற பொருளைக் குறிக்கும் சொல் பொன்னால் ஆகிய குடத்தைக் குறிப்பதால் பொற்குடம் என்ற தொடர்மொழி காரணக்குறி என்று கூறுவதே சரியானதாகும்.

எனவே தனிமொழி, தொடர்மொழி பொருள் குறிப்பை குறித்து பல்வேறு கருத்துக்கள் இடம் பெற்றாலும் உரையாசிரியர்கள் கருத்துப்படி அசைநிலை இசைநிரை ஆகியனவும் பொருள் உணர்த்துவனவேயாகும்.

அடிக்குறிப்புகள்

1. தொல் - சொல் - பெயரியல் - நூ -1
2. தொல் - சொல் - நச்சி - உரை நூ - 157
3. தொல் - சொல் - பெயரியல் - தெய்வ - உரை - நூ - 2
4. தொல் - சொல் - பெயரியல் - கல்லாடர் - உரை - நூ - 2
5. தொல் - சொல் - சேனா உரை - நூ- 155
6. Although we commonly say that sentences or phrases are or are not meaningful we do not normally say that word are not meaningful... Lyns - J.Introduction to Theoretical Iilguaistics.
7. தொல் - சொல் - நச்சி உரை - நூ - 157
8. செ.வை. சண்முகம் சொல்லிலக்கணக்கோட்பாடு.

"பாடாணும்" மூலிகையே!

க.குழந்தைவேல் பன்னீர்செல்வம்

M.A , M Ed ,M Phil ,DTE, DEPA

முன்னுரை:

ஞாலத்தின் அடிப்படையாக இருப்பது - மூலமாக இருப்பது - மரஞ்செடி கொடிகள். ஆதவனின் ஒளியை ஆதாரமாகக் கொண்டது இந்த - மூலங்கள் - மூலிகைகள். மூலத்தின் வழியே காலூன்றி நிற்பவைகள் மூலிகைகள். தமிழர்கள் தாம் ஒழுகும் அக ஒழுக்க முறைகளுக்கு முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என மூலிகைகளின் பிறப்பு - வளரிடத்தை முதலாகக் கொண்ட நிலப்பகுதிகளுக்குப் பெயரிட்டனர். இதுபோல பூச்சூடி போர்புரியும் புறத்திணைக்கும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்று மூலிகைகளை பெயர்களாகக் கொண்டதில் வியப்பில்லை. கைக்கிளை, பெருந்திணை நீங்கலாக பிற பன்னிரண்டு திணைகளும் ஒழுக்கம் நிகழும் இடமாகும். எனவே இவ்விடங்களில் மூலிகைகள் பெயரை இக்கட்டுரை ஆராய்கிறது.

தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற இலக்கண நூல்களின் உரையாசிரியர்கள் இறுதித் திணையாகிய பாடாண் திணையை "மூலிகை" என்ற அடிப்படையில் விளக்கவில்லை. மாறாக பாடப்பெறும் ஆண்மகனின் வீரம், கொடை, ஒழுக்கம் என்ற நிலையிலேயே திணையாகப் போற்றப்பட்டன.

"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங்காலை நாலிரண்டு உடைத்தே"

(தொல்: பொருள்: 80 இளம்; உரை)

என ஆறு புறத்திணைகளுக்கும் மூலிகைப்பெயர்கள் அடிப்படையாக இருக்கிறது. ஏழாவது புறத்திணையாகிய பாடாண் திணைக்கும் மூலிகைப் பெயரே அடிப்படையா இருத்தல் வேண்டும் .... இருந்திருக்க வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாடாண்:

'பாடாண்' என்பதும் ஒருவகை மூலிகையே என்பதை பொருத்தமான விளக்கத்துடன் அறிய முடியும். பாடாண் என்ற சொல் பாடு+ஆண் என்று பிரிந்து 'பாடு' என்ற உரிச்சொல்லின் புறத்தே 'ஆண்' என்னும் பெயர்ச் சொல்லாக விளங்குகிறது. 'பாடு' .... பெருமை,[1] பேடு[2], சாவு[3] என்ற பொருளிலும் 'ஆண்' .... அழகு, தோற்றம், மணம், வீரியம் மருந்து இவைகளைக் கொண்ட மரம் பெயரிலும் வழங்கப்பட்டது. இதனால் பாடாண் என்ற சொல் மூலிகையில் (Herbal Pharmacology) அடிப்படையில் பெருமை மிக்கதும் மரணத்தை தவிர்ப்பதுமான ஒரு மரம் என்று விளக்கம் பெறும். எனவே புறத்திணை வெட்சியில் தொடங்கி பாடாண் என்ற திணைவரை உள்ள ஏழும் மூலிகைப் பெயராகக் கொள்வது சரியானதாக இருக்கும்.

தொல்காப்பியரும் ஆண் மரமும்:

'ஆண் மரக் கிளவி அரைமர இயற்றே' (தொல்.எழுத்.மர.305)

என தொல்காப்பியரால் குறிக்கும் மரம் பல அரிய மூலிகைகளில் ஒன்றாகும். தமிழ் நிலத்தில் இம்மரம் இருக்கிறதா என்று அறிவியல் சார்ந்த மூலிகையியல் தடயவியல் (Botanical Identity) கண்டறிந்ததாகத் தகவலில்லை. ஆனால் நிகண்டாசிரியர்களும் அகராதியாசிரியர்களும், கலைக் களஞ்சியம் உருவாக்கியவர்களும் இதனைத் தெளிவாகக் குறிப்பிட வில்லை என்றாலும் ஓரளவு தோராயமாகக் குறித்துள்ளனர்.

பாடாண் மரத்தை குறிப்பது:

1. நஞ்சை முறிக்கும் சேரான் மரம் - பிங்கலம்
2. கருங்காலி மரம் - சாம்பசிவம்
3. காய்க்காத கோளி மரங்கள், ஆண் பனை போன்றவை - சாம்பசிவம்
4. நஞ்சை முறிக்கும் ஆற்றலுள்ள அழிஞ்சில் மரம் - மலையகராதி

என்ற மரங்களை பாடாண் மரம் குறிப்பதாக இரா. குமாரசுவாமி அவர்கள் தனது 'பாடாண் திணை- ஒரு மூலிகை மருந்தறிவியல் ஆய்வு' என்ற கட்டுரையில் கூறுகிறார்.)தமிழியல், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1982 - ஜுன், ப: 89)

சேரான் மரம் (சேமரம்):

சேரான் மரத்தின் செங்கொட்டையிலுள்ள நெல் நஞ்சை முறிக்கும் இயல்புடையது. சித்தர்கள் உண்ணும் கல்ப மூலிகை "தமிழகத்தில் வளர்ந்து மூலிகைகளுக்கு நிறமூட்டி மூலிகைகளைக் கல்பமாக்கும் ஆற்றலுடையது"[4]

"சேமரத்தையும் ஆண்மரத்தையும் வெவ்வேறான மரக்கிளவிகளாக எழுத்ததிகாரத்தில் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்"[5] இதனால் சேமரம் என்பது ஆண்மரமாகாது எனத் தெரிகிறது.

கருங்காலி:

"கருங்காலி மரத்திற்கு வலிமை மிக்க உள்வயிரமும் சிறந்த துவர்ப்புச் சத்தும் உண்டு. அதனால் நஞ்சு முறிக்கும் தன்மையில்லை"[6] எனவே இதுவும் ஆண்மரமாகாது.

ஆண்பனை:

"காய்க்காத இம்மரம் பனையில் ஆண் இனம். புல்லினத்தது. தாலப்புல் என்பார் இளங்கோவடிகள்"[7]. உள்வயிரமற்றது; புறக்காழ் உடையது; நஞ்சுகளை முறிப்பதில்லை.

அழிஞ்சில்:

தொல்காப்பியம் கூறும் ஆண்மரம் அழிஞ்சில் மரம் என்பதற்கான சான்றுகள் பல உண்டு. இச்சான்றுகள், ஆண்மரத்தின் அடையாளங்களைக் காட்டுவதுடன், பாடாண் திணைக்கும் சான்றாக அமைந்து ஒரு 'மூலிகை' அடிப்படையை வழ்ஙகுகிறது.

"அழிஞ்சில்" என்ற சொல் அழிவற்றது என்பதாகும். தமிழிலும், இதன் கிளை மொழியான மலையாளத்திலும் இன்றும் இதனை 'அழிஞ்சில்' என அழைக்கப்படுகிறது. எளிதில் அழியாது

பல்லாண்டு வாழும் ஆல், அரசு, அத்தி, இத்தி போன்ற மரங்களை விட அழிஞ்சில் மரம் (ஆண்மரம்) பல தலைமுறைகள் வேர்க் குறுத்துக்கள் வழியே நாற்றிசையும் நிலத்தின் கீழ் கிளைபரப்பிப் பல்கும் பண்புடையது."[8]

"அழிஞ்சில்" மரத்தைச் சுற்றிலும் விதை முளையாது அதன் வேர் மொக்குகள் பல மரங்களை உருவாக்கிவிடும். இறுதியில் ஒரு அழிஞ்சில் காட்டையே தோற்றுவிக்கும் ஆற்றல் பெற்றது., இதனை இன்றும் சேலம், தருமபுரி, தென்னார்க்காடு, வடார்க்காடு, குறநாடு, கேரளம் போன்ற பகுதிகளில் காணலாம். அழிஞ்சில் காட்டினை அதன் வறட்சி குறித்துப் பாலை நிலமென்பது மக்களது மரபு"[9]. எனவே ஆண்மரமான அழிஞ்சில் பாலைக்குரிய கருப்பொருள், அழிஞ்சிக்கோடு, ஆனாங்கோடு, திக்கணங்கோடு போன்ற மூலிகை வழிப் பிறந்த ஊர்ப்பெயர்கள் இன்றும் குமரி மாவட்டத்தில் உண்டு.

உண்டவர் அழிவையும் தன் அழிவையும் தடுக்கும் உண்மையுள்ள மரம் அழிஞ்சில் என்ற உண்மையை அதன் தொல்காப்பியப் பெயரான ஆண்மரமும் தற்காலப் பெயரான அழிஞ்சிலும் வெளிப்படையாக விளக்குகின்றன. தன் இன அழிவைத் தவிர்த்தல் அதன் மருத்துவ மேன்மை.

"அழிஞ்சில் மரம் பெரும்பாலும் தன் விதைகள் வழி இனம் பெருகுவதில்லை என்பது வியப்பானது. வீரியமான விதைகள் நிலத்தில் விழாமல் பழமுண்ணும் அணில், வவ்வால் போன்றவற்றின் செயல்களால் மரக்கிளைகளில் ஒட்டிக்கொள்கின்றன. நிலத்தில் விழுந்த விதைகளோ முளைக்கும் வீரியமின்றிக் காணப்படும்"[10]

"கனிகள் உண்ணத்தகுந்தவை, இனிமையானவை, கருஞ்சிவப்பு நிறமுடையவை, தடித்த மேல்த்தோலும் ஒட்டும் கோழைப் பொருளும் இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, சுவையுமுள்ள சதைமிக்க சுவரும், கட்டியான கொட்டையும் கொண்டது."[11] கனியை அணிலும் பறவைகளும் உண்பதுண்டு. மக்களும் உண்பதுண்டு. ஆயினும் பலர் இம்மரத்தின் சித்துத் தன்மை குறித்து அஞ்சி உண்பதில்லை. இணையற்ற அழகுடன் பூத்துக் காய்க்கும்

இக்கனிகளின் விதைகளைச் சூழ்ந்து ஒட்டும் தன்மையுடைய தசையுண்டு. இவ்வாறு பல விதைகள் மரத்தூரிலும் கொம்புகளிலும் புதைந்து இருத்தல் ஆண் மரத்திற்குரிய விந்தையாகும்.

அழிஞ்சில் கனியின் சுவரிலுள்ள இனிமையும், உவர்ப்பும் கொண்ட கோழைப்பொருள் நிறைந்த தசை காரணமாக வவ்வாலும் அணிலும் இவற்றை விரும்பி உண்ணும். அழிஞ்சில் விதைகளில் இருவகை இருப்பதைக் காணலாம். தாமரைக் கொட்டை போன்ற உருவமும் கடினமான ஓடும் வேற்கொள் வடிவமும் கொண்டவை முதல்வகை. இவை எளிதில் நொறுங்காத நல்வித்துக்கள். இவை அழிவதில்லை. அரைக்கோள வடிவமும் எளிதில் நொறுங்கும் மெல்லிய தகடு போன்ற ஓடும் கொண்ட பதர் விதைகள் இரண்டாம் வகை. இவை புழுத்துப் போகும் தன்மை கொண்டவை.

அழிஞ்சில் பூக்களில் சில்வண்டுகள் (Ciccada) இடும் முட்டைகளிலிருந்து பொரித்து விதைகளுடன் வளர்ந்து அவற்றின் பருப்பைப் பல நாட்களாக அரித்துத் தின்று வளர்ந்த புழுக்களே சில் வண்டுகள். இப்புழுக்கள் வளர்ந்ததும் பதர் விதைகளில் துளையிட்டு வெளியேறி வண்டுகளாகிவிடும். புழுக்கள் வளரும்போது இவற்றை தின்ற எறும்புகள் உட்செல்லும். இப்புழுக்களைத் தின்ற பின் எறும்புகள் இவ்விதைக் கூட்டினுள் முட்டையிடுவதுண்டு. இதனால் நுனிக்கொம்பிலுள்ள புழுக்கொண்ட பதர் விதைகளை இவ்வெறும்புகள் கீழ் கொம்பிலுள்ள தம் உறைவிடத்திற்கு இழுத்துச் செல்வதுண்டு. மரத்தில் தங்காமல் நிலத்தில் விழுந்த பதர்க்கொட்டைகளைக் கூட எறும்புகள் சில சமயங்களில் இவ்வாறு மரத்தில் இழுத்து ஏற்றுவதைக் காணலாம். எறும்பு முட்டைகளைக் கொண்ட பதர் விதைகள் நூற்றுக்கணக்கில் மேற்கொம்புகளின் அடிப்புறத்தில் புதைந்திருக்கும் காட்சி அழிஞ்சிலுக்கே உரிய விந்தையாகும். இது மாமரத்தின் இலைகளில் கட்டும் முசுறு முட்டை எறும்பின் கூறுகளைப் போன்றது.

அழிஞ்சில் கொட்டைகளை எறும்புகள் இழுத்துச் செல்லும்.

இவை மரத்தில் ஏற்றவும் இறக்கவும் பெறுகின்றன என்பது அனுபவ உண்மையாகும். இந்நிகழ்ச்சியை இயற்கை அறிவுமிக்க சங்கப்புலவர்கள் அழிஞ்சில் மரக்கொம்புகளில் வாழும் சில்வண்டுகள் மூலம் வாழ்க்கையை நமக்கு உள்ளுறையாக உணர்த்திச் சென்றனர். இருப்பினும் இந்த உண்மையை நாம் அறிந்துகொள்ள பல நூற்றாண்டுகளாகிவிட்டன.

நிலத்தில் விதை முளைக்கும் வீரியத்தை - பெண்மை இயல்பை - அழிஞ்சில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இழந்துவிட்டது. இதனால் கருவிளம், கூவிளம், மல்லிகை போன்ற மூலிகைகளைப் போல வேர்த்தண்டு வழி இனப்பெருக்க வீரியத்தை அதாவது தனது ஆண்மையை, சிறப்பாக்கிக் கொண்டதில் வியப்பேதுமில்லை.

இவ்வாறு அழிவுறும் போது வேர்குருத்துக்கள் வழி உயிர்த்தெழும் ஆண்மையுள்ள அழிஞ்சில் "ஏறு ஆண்" என்று பெயர் பெற்றது. தலைவனது வீரக்குடியின் ஆண்மையைப் புகழ்தல் ஏறாண் முல்லை என்னும் துறை.

தொல்காப்பியத்தில் அரிதாகக் குறிக்கப்பெற்ற ஆண்மரமான அழிஞ்சிலின் இனப் பரப்பு இன்று வடக்கே சீனம் முதல் தெற்கே ஆஸ்திரேலியா வரையிலும் பரந்து விரிந்துள்ளது. "சங்ககாலத்தில் குறிப்பாக ஆரியவர்த்தத்தில் ஆண் மரத்தை அதன் அழகு கம்பீரம் மருத்துவப் பயன் குறித்து 'அங்கோலம்' என்ற பெயரில் வழங்குவதாக வடமொழி மருத்துவ நூல்களின் வழி அறிகின்றோம்"[12] இது ஆண்கோலம் (ஆண்மரக்கனி) என்ற சொல்லின் திரிபு ஆகும். கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்த சரக சம்ஹிதை என்ற ஆயுள் வேத மருத்துவ நூலில் 'அங்கோலம்' அதன் குண அடிப்படையில்

"அங்கோலம் - அழகிய உருண்டைக்கனி
அங்கோடம் - அழகிய கொம்புடையது
அங்கோடகம் - குரங்குகளின் உறைவிடம் - என்று பல்வேறு பெயர்களால் வழங்கப்படுகிறது".[12]

இடைச்சங்ககால இலக்கணமான தொல்காப்பியத்தில் சொல்லப்பெறும் ஆண்மர்ம் என்ற சொல்லை, கடைச் சங்க

இலக்கிய நூல் ஒன்றில் கூட காணாதது வியப்பளிக்கிறது. தொல்காப்பியம் குறிப்பிடும் பிற மூலிகைகளான யா, அரை, ஞெமை, தளவு, பிடவு, அதவு போன்ற மரங்கள் பற்றிய செய்திகள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் காணப்படுகிறது. ஆனால், ஆண்மரம் பற்றிய செய்தி ஒன்று கூடக் காணமுடிவதில்லை.

பிற்கால நிகண்டுகள் மருத்துவ மொழியில் அழிஞ்சில்பட்டையை யானை விரும்பி உண்ணும் அடிப்படையில் தொடர்புபடுத்தி 'அத்திக்கோலம்' (அத்தி - யானை), கரிக்கோலம் (கரி - யானை) என்ற பெயர்களில் வழங்கலாயினர். இது போல அணில்கள் உண்ணும் அடிப்படையில் 'கலந்தகம்' என்றும், குரங்குகளை தொடர்பு படுத்தி 'கோடரம்' என்றும், எறும்புகளின் உறைவிடத்துடன் ஒப்பிட்டு 'கீடகம்' என்றும் புழுக்கள் துளைக்கும் அடிப்படையில் 'கிருமித்துவம்' என்றும் கூறினர்.

அழிஞ்சிலின் காய்களை அரவு நச்சிலிருந்தும் அம்பு நச்சிலிருந்து உயிர்காக்கும் சஞ்சீவியாகக் கொண்டு மன்னர்களும் மக்களும் காப்பு நாணாக நெற்றியிலும் கழுத்திலும் சூடிக் கொள்ளும் முறை இருந்தது.[14] இவ்வாறு காப்பு கட்டும் வழக்கத்தை கங்கணம் கட்டுதல் என்பர்.

"அரவின் நஞ்சுக்கு அழிஞ்சிற்பட்டை அருமையான மருந்தாவதை இக்கால மருத்துவர் பலர் அனுபவ அடிப்படையில் காண்கின்றனர். இலைகளுடன் இருக்கும்போதும், இலைகளின்றி பூத்துக் குலுங்கும் போதும் கனிகள் மட்டும் தொங்கும் போதும் ஆண்மரம் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் எழில் கொண்டது. ஆண்மைக்குரிய அழகுத் தோற்றமும், தொங்கும் பசுந்தழையும் எங்கும் மணக்கும் மலர்க்கொத்தும், கண்கவரும் கனியும் கொண்ட அழிஞ்சிலை அங்கோலமென்று (அழகிய கோலம்) பல இந்திய மொழிகளிலும் அழைப்பதில் வியப்பில்லை".[15]

தமிழகத்தின் சித்தர்கள் பலரும் அவர்களது மாணாக்கர்களும் தமிழ்மொழியைப் போன்றே வடமொழியையும் கற்றுக்கரை

கண்டதனால் அழிஞ்சில் என்ற தமிழ்ப் பெயரையும், அங்கோலமென்ற வடமொழிப் பெயரையும் மணிப்பிரவாள நடையில் பயன்படுத்தியுள்ளனர். திருமூலரின் சீடரான போகர், தம் நிகண்டில் அழிஞ்சிலின் பெயர்களை ஆதி என்றும் அங்கோலதரிசினி என்றும் போகுநல்வித்து என்றும் சீவினி என்றும் பித்தசாரம் என்றும் கூறுகிறார். தமது 1200 பாடல்களிலுள்ள பலநூறு மூலிகைகளிலும் அழிஞ்சிலுக்கு மட்டும் ஆண்மை என்ற பண்பைப் பயன்படுத்துவதால், அழிஞ்சிலே ஆண் மரம் என்பதற்குரிய ஆதாரங்களில் ஒன்று.[16]

அழிஞ்சி லென்ற பேரினுட ஆண்மை கேளு
ஆதியாம் அங்கோல தரிசினி யாகும்
பொழிஞ்சில் என்ற போகுநல் வித்தூணியாகும்
புகழான சீவினி இந்திரசாலி
கொழிஞ்சிலென்ற கோலினிற நிஷ்டோவாகும்
கூரான தீர்கமூல மாகும்
பிழிஞ்சில் என்ற பித்த சத்தாம் பிரபலமாகும்
பேசியதோர் அழிஞ்சுலடே பேருமாமே

(போகர் நிகண்டு, 860)

சிறப்பு மிக்க மருத்துவப் பயன்களும் மனோவசியப் பயன்களும் மிக்க அழிஞ்சில் இடைச்சங்க காலத்திலும் கடைச் சங்ககாலத்திலும் பிற்காலத்திலும் ஆண்மரம், ஏறாண்மரம், ஓமை, அங்கோலம், அழிஞ்சில், அங்கூரம், அகருகண்டம், கரிக்கோலம், செம்பரம், கலந்தகம், கோடரம், தீர்க்க கண்டகம், மாங்கல்யம், நாற்குணம், கிரிமித்துவம், ஒரு போன்ற எழுபதுக்கும் மேற்பட்ட காரணப் பெயர்களால் அழைக்கப்படுகிறது. கடுக்காய்க்கு அடுத்த நிலையில் ஏராளமான காரணப் பெயர்களைக் கொண்ட மூலிகை மரம் அழிஞ்சில் ஆகும். மக்களின் வழக்கில் மலிந்த மூலிகை மட்டுமே இத்துணை அதிகமான பெயர்களைக் காலப் போக்கில் பெற முடியும். இம்மூலிகை காலப்போக்கில் அருகிவரக் காரணம் அழிஞ்சிலின் விதைகள் மரத்திலிருக்கும் போதே முளைக்கருமுற்றி வேர்தோன்றி முளைசூழ்

நொறுங்கிவிடுவதே முக்கியமானதாகும். காலங் காலமாக வேர் வழி இனம் பரவும் வாழை, கரும்பு, முல்லை போன்று இனப்பெருக்கத்தை மாந்தரினம் பேணிப் பயிரிட்ட காரணத்தால் இவ்வினங்கள் அழியாமலுள்ளன. ஆனால் வேர் வழி பெருகும் அழிஞ்சிலை பயிரிடுவார் இல்லாததும் காரணமாகும்.

முடிவுரை:

- பாடாண் திணை என்பது மூலிகையை ஆதாரமாகக் கொண்டு தோன்றியதே.
- பாடாண் என்ற சொல் சாவைத் தடுக்கும் ஆண் மரமாகும்.
- ஏறான் முல்லை என்ற பெயர் மூலிகை அடிப்படையில் பாடாண் மரத்தின் மணமிக்க மலர் பெயரில் உருவானது.
- அழிஞ்சிலை ஆதாரமாகக் கொண்டு பல இடப் பெயர்கள் தோன்றின.
- இன்று அழிஞ்சிலின் இன அழிவிற்கு, இதன் மருத்துவ சிறப்பை உணராது இருப்பதும் காரணமாகும்.

மேற்கோள் நூல்கள்:

1. திருக்குறள்: 409
2. புறநானூறு: 371
3. பாரத வெண்பா : 813
4. திமூலர் கற்பகம் : 46, போகர் ஏழாயிரம் : 816
5. தொல்காப்பியம் : எழுத்து : 305 : 279
6. Wealth of India, Vol. I : 20
7. சிலப்பதிகாரம் : 817
8. Kirtikar and Basu (1935) : Indian Mdeicinal Plants : 637
9. நம்பிள்ளை (1925) ஈடு : 6 : 2 : பாரா
10. Brandis (1918) Indian Trees : 354
11. Kirtikar and Basu (1935) : Indian Medicina Plants : 637
12. Charaka Samhita : II: 31
13. Oushadi Nighantu : 3
14. கிருஷ்ணசாமி (1952) கருநாடக வரலாறு
15. Chopra R.N.Indigenous Durgs of India : 270
16. போகர் நிகண்டு : 860

தொல்காப்பிய இலக்கியக் கொள்கை (அகம்)

முனைவர் பெ.சுயம்பு

தொல்காப்பியம் இந்நாளில் கிடைக்கப் பெற்றுள்ள தமிழ் எழுத்துச் சான்றுகளுள் மிகத் தொன்மையானது. இந்நூல் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முந்தையது என்பது பெரும்பான்மை அறிஞர்களின் துணிவு. இது தமிழின் மொழியமைப்பினையும், இலக்கியக் கொள்கையினையும் விரிவாக விளக்குகிறது.

செந்தமிழ் இலக்கணம்

தொல்காப்பியம் வழக்கு, செய்யுள் என்னும் இருவகை மொழி நடைகளையும் தம் இலக்கண விதிகளுக்கான தரவுக் களங்களாகக் கொண்டுள்ளது. இதனைப் பனம்பாரனார் எழுதிய தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம்,

“வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்நூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலம்தொகுத் தோனே.!

எனக் கூறுகிறது. வழக்கு, செய்யுள் என்னும் இருவகை நடைகளையும் கொண்ட எழுத்து மொழியாகிய செந்தமிழுக்குரிய மொழி அமைப்பினையும் இலக்கியக் கொள்கையினையும் தொல்காப்பியம் விவரிக்கிறது. இதனைப் பனம்பாரனாரின் பாயிரக் குறிப்பு மட்டுமன்றி, நூலுள் இடம் பெற்றுள்ள செய்திகளும் உறுதிப்படுத்துகின்றன. மேலும், மொழி அமைப்பையே அன்றி, அம்மொழிக்குரிய் இலக்கிய அமைப்பினையும் இலக்கணம் எனத் தொல்காப்பியம் கருதுகிறது என்பதையும் இங்குக் குறிப்பிட்டாக வேண்டும்.

தொல்காப்பியம் (பொருள்)

'வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் காக லான.'

என வழக்கிற்கு இலக்கணம் கூறுகிறது. ஆழ்ந்த புலமையும் நிறைந்த நற்பண்புகளும் கொண்ட சான்றோர்களின் மொழி நடையினையே தொல்காப்பியம் வழக்கு எனக் கூறுகிறது. சான்றோர்களின் வாழ்வியலை மாந்தர் முன் மாதிரியாக ஏற்று வாழ்கின்றனர்.

'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே'
என்னும் விளக்கம் இந்நடப்பியலை ஒட்டி எழுந்ததாகும். எனவே வழக்கினைப் பிற்கால இலக்கண நூல்கள் உலக வழக்கு எனவும் குறிப்பிடுகின்றன.

கற்றறிந்த புலமையாளர் எழுதுவதைப் போன்றே ஒலிகளிலும் சொற்களிலும் தொடர்களிலும், பொருளிலும் சிதைவின்றிப் பேசுவர். எனவே இவர்களது மொழிநடை செந்தமிழ் எனக் கூறப்படுகிறது. இந்நடை சிதைவின்மை காரணமாகப் பல வட்டாரங்களையும் இனங்களையும் சார்ந்துள்ள தமிழ் மக்கள் யாவராலும் புரிந்துகொள்ளத் தகுந்தது. எனவே இதனைத் தமிழ் மொழி இலக்கணத்தினை விவரிப்பதற்குரிய தரவாகத் தொல்காப்பியம் தெரிவு செய்துள்ளது. இத்தெரிவு முன்னோர் வழங்கிய மரபினை ஒட்டியது என்பதனை, 'என்ப, என்மனார் புலவர், என மொழிப தொன்மொழிப் புலவர்' என்பன போன்ற முந்நூற்றைந்து தொல்காப்பியரின் கூற்றுக்களின்வழி அறியலாம்.

செய்யுட்கள் புலமையாளரின் மொழிவழக்கில் எழுதப்படுகின்றன. இதனை,

'உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்
வழக்கு வழிப்படுதல் செய்யுட்குக் கடனே' (தொல்.பொருள்)
என்னும் நூற்பாவில் காணலாம். புலவர்கள் செந்தமிழில் மட்டு மன்றி, பேச்சுத்தமிழ் வழக்குகளிலும் பிற மொழிகளிலும் புலமை பெற்றோர் ஆவர். எனவே இவர்கள் இயற்றுகிற செய்யுட்களில் செந்தமிழ்ச் சொற்களாகிய இயற்சொற்கள், திரிசொற்கள்

ஆகியனவும் பேச்சு வழக்குகளாகிய திசைச் சொற்களும் பிறமொழிச் சொற்களாகிய வடசொற்களும் அரிதாகச் செய்யுளில் கலந்து வருதலைத் தமிழ் இலக்கியக் கொள்கை ஏற்றுள்ளது. மேலும், செய்யுட்கள் அவற்றிற்குரிய கட்டமைப்பு (யாப்பு) விதிகளை மீறுதல் ஏற்கப் பெறவில்லை; எனவே அவ்விதிகளுக்கு ஏற்பச் சொற்களின் எழுத்துக்களைத் திரித்தும் (ஒலி மாற்றம் செய்தும்) தொடர்களில் சொற்களின் வருகை முறையினை மாற்றியும் அமைத்துக் கொள்ளலாம். இத்தகைய சிதைவு செய்யுள் கட்டமைப்பின் மையமாகிய ஓசை வகைமைக்காக அரிதாக ஏற்கப்பெற்றுள்ளது. எனவே இவை குறித்த விதிகள் விருப்ப நிலையைச் சார்ந்தவையாகும்.

உலக வழக்கிலிருந்து சிறிய வேறுபாடுகளைக் கொண்டுள்ளதால், செய்யுள் வழக்குத் தனிவகையாகக் கருதப்படுகிறது. மேலும், உலக வழக்கிலிருந்து வேறுபடுகிற இடங்களையும் தொல்காப்பியம் சுட்டிக் காட்டுகிறது. இத்தகைய வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டும் விதிகள் எழுத்ததிகாரத்தில் பத்தும் (51,208,213,237,258,288,305,316,356,479) சொல்லதிகாரத்தில் பதின்மூன்றும் (18,39,109,198,199,213,403,409) மட்டுமே உள்ளன என்பது இங்குக் குறிக்கத் தக்கது.

பொருளதிகாரம்

தொல்காப்பியம் தமிழ் இலக்கியங்களின் அமைப்பு அவற்றை உருவாக்குகிற நெறிகள் என்னும் இலக்கியக் கொள்கையினை விவரிக்கும் பொருட்டு எழுதப் பெற்றுள்ளது என்ற கருத்து நெடுங்காலமாக நிலைத்து நிற்கிறது.

இறையனார் களவியலுரையில் இது பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

> "கழிந்த பின்னர் நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்னர் அரசன் இனிநாடு நாடாயிற்றாகலின், நூல் வல்லாரைக் கொணர்க என்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தலைப்பட்டிலேம் என்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று என்னை, எழுத்தும் சொல்லும்

யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே. பொருளதிகாரம் பெறேமேயெனின் இவை பெற்றும் பெற்றிலேம் எனச் சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயில் அழல் நிறக் கடவுள் சிந்திப்பான் என்னை பாவம் அரசர்க்குக் கவர்ச்சி பெரிதாயிற்று அது தானும் ஞானத்திடையதாதலின் யாம் அதனைத் தீர்க்கற் பாலம் என்று இவ்வறுபது சூத்திரத்தையும் செய்து மூன்று செப்பிதழகத்து எழுதிப் பீடத்தின்கீழ் இட்டான்"

களவியலுரையின் இக்குறிப்புப் பொருளிலக்கணமே தமிழ் இலக்கண நூல்களின் மையப்பகுதி என்பதனைச் சுட்டிக் காட்டுகிறது. இவ்விலக்கணம் தமிழுக்கே உரிமையான இலக்கிய நெறிகளை விவரிப்பதாகும்.

தொல்காப்பியப் பொருளதிகாரம் குறித்து இந்நாளில் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இது திருமணம், காதலரின் பிரிவு, போர்முறை, அரசியல், உலக வழக்காறு போன்ற பழந்தமிழரின் சமூக வாழ்க்கையை மட்டுமன்றி, தனிமனித உளவியல், பேச்சுத்திறன், செய்யுளியல் போன்றவற்றையும் விவரிக்கிறது என அ.சிதம்பரநாத செட்டியார் (Tolkappiuam Porulatikaram, Page 2) கூறுகிறார். இவ்வதிகாரம் தொல்காப்பியர் காலத்தைய இலக்கிய ஆய்வு குறித்து விளக்குகிறது என்பது சி. இலக்குவனாரின் (Tolkappiam in English with critical Studies, Page 391-392) கருத்து. தொல்காப்பியர் தமது இலக்கணத்தை எழுதியதன் நோக்கம் வாழ்க்கைக்கு இலக்கணம் கூறுவதற்காக அன்று என்ற கருத்து ஆய்வுலகில் நிலை நாட்டப்பட்டுள்ளது (ம.சத்தியமூர்த்தி, தொல்காப்பிய மரபியல் - ஓர் ஆய்வு, பக்கம் 30)

எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் அறிந்துகொள்ளுவதெல்லாம் அதற்கு மேம்பட்ட நிலையில் உள்ள இலக்கிய இலக்கணங்களைப் படித்துப் புரிந்து கொள்ளுவதற்காகவே என்ற கருத்து வலுவுடையதாகவும் உறுதிப்படுத்தத் தக்கதாகவும் அமைந்திருக்கிறது. பொருளதிகாரம் முழுமையும் இலக்கிய இலக்கணங்களைப் பற்றிய ஆராய்ச்சியாகவே அமைந்திருக்கிறது... சுருக்கமாகச் சொன்னால், இலக்கியத்துக்கு உரிய பாடுபொருளாய்வு இலக்கிய வகைப்பாடு, இலக்கியத்துக்கு

உரிய வடிவம் பற்றிய ஆய்வு விளம்புமுறை பற்றிய ஆய்வு ஆகியன எல்லாம் இந்த இயலில் தெளிவாக நிகழ்த்தப் பட்டிருக்கின்றன. நாடகங்களும் இலக்கியங்களில் அடங்குமாதலால் நாடக நூலை எழுதும்போது மெய்ப்பாடு பற்றிய சிந்தனை விரிவாகத் தேவைப்படுகிறது. ஆகவே மெய்ப்பாட்டியலுக்கு இங்கே இந்தப் பகுதியிலேயே இடமளித்திருக்கிறார் (பொற்கோ, 'தொல்காப்பியப் பொருளதிகாரம்', தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள், பக்கம் 134 - 135)

'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புதல்' (நன்னூல்) என்பதே மரபிலக்கணிகளின் கொள்கை. எனினும், தனிமனித, சமூக வாழ்வியற் செய்திகள் இலக்கண விதிகளுக்குக் களமாகக் கொள்ளப்படுகின்றன. இலக்கியம் வாழ்வியலை ஒட்டியது, அரசியல், சமூகம், பண்பாடு போன்ற வாழ்வியற் கூறுகளைச் சார்ந்து, அவற்றோடு இணைந்தே இலக்கியம் தோன்றுவதனால், அதன் நிலைப்புத்தன்மை அதிகரிக்கிறது. மேலும் இலக்கியத்திற்கு உயிரோட்டத்தையும் நடப்பியல் உணர்வினையும் இவ்வாழ்வியற் கூறுகளே தருகின்றன. எனவே தொல்காப்பியமும் இத்தகைய வாழ்வியற் கூறுகள் பற்றிய செய்திகளைத் தம் இலக்கியக் கொள்கை விவரிப்பிற்கு ஆதாரமாகக் கொண்டுள்ளது. இதன் வாயிலாக இந்நூல் ஓர் இலக்கிய இலக்கணநூல் என்பதனோடு, பழந்தமிழ்ச் சமூக வழ்வியல் நூல் எனவும் கருத இடமளித்துள்ளது.

செய்யுளியல்

செய்யுளியல் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் எட்டாவது இயலாக இடம்பெற்றுள்ளது. எனினும் இதுவே தொல்காப்பியத்தின் மையப் பகுதியோ எனக் கருதும் சிறப்பிற்கு உரியதாகிறது. இதில் இலக்கியத்தின் ஒருங்கிணைந்த உறுப்புக்கள் யாவும் பட்டியலிடப்பட்டு, ஒவ்வொன்றாக விவரிக்கப்படுகின்றன.

"செய்யுளியலின் முதற் சூத்திரமும் 34 உறுப்புகளைக் கொண்ட ஒரு கட்டமைப்பாகச் செய்யுள் அல்லது இலக்கியத்தைக் கருதுகின்றது. இவற்றில் முதல் இருபத்தாறினையும் பின்னைய

எட்டிலிருந்து வேறுபடுத்திக் காண்கிறார் தொல்காப்பியர். முதல் இருபத்தாறும் சிறப்பாகத் தனிநிலைச் செய்யுட்கு உரியவை; பின்னைய எட்டும் பெரும்பாலும் தொடர்நிலைச் செய்யுட்கு உரியவை எனலாம்.

முதல் 26 உறுப்புக்களும் பிறிதொரு பாகுபாட்டிற்குட் படுகின்றன. மாத்திரை முதலாக அளவு வரை அமையும் முதல் பன்னிரண்டு உறுப்புக்களும் வடிவமைப்பைச் சார்ந்தவை. அவை பா அமைப்பிற்கும் கவிதையின் ஒலித்தளத்திற்கும் பெரும்பான்மை பொருந்துகின்றன. திணையில் தொடங்கி மாட்டில் முடியும் (13-25) உறுப்புக்கள் அகப்பாடல்களுக்குப் பெரிதும் பொருந்தும் ஒரு பாடுபொருள் கட்டமைப்பைத் தருகின்றன. இறுதியாக அமையும் வண்ணம் ஒலிகளின் மீள்வால் ஏற்படும் சில நயங்களைத் தந்து வடிவமைப்போடு இணைகின்றன. எனவே வடிவமைப்புத் தளம் - பாடுபொருட்டளம் என்ற இரண்டு தளங்கள் இங்கு இனங்காணப் படுகின்றன" (இந்திரா மனுவேல், 'தொல்காப்பியத்தில் பொருள் தளமும் பொருள் கூறுகளும்', தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள்; பக்கம் 44)

ஓர் இலக்கியத்தின் சிறப்புக்கு அதன் பாடுபொருளாகிய கருத்து மட்டுமன்றி, அதனை உணர்ச்சி மழுங்காமல் உணர்த்துகிற விவரிப்பு முறையும் காரணமாகிறது. செய்யுளின் அக அமைப்பாகிய கருத்தினை வெளிப்படுத்துவதாக அதன் புற அமைப்பாகியஓசை காணப்படுகிறது. இது இலக்கியத்துக்கு இனிய ஓசையை மட்டுமன்றி, அதனைப் பாடுவோரிடமும் கேட்போரிடமும் பாடு பொருளுக்கு இயைந்து உணர்ச்சியினையும் தர வல்லது. இதனாலேயே தொல்காப்பியர் மாத்திரை முதலான ஓசை உறுப்புக்களையும் ஒருங்கிணைத்து, செய்யுளின் கட்டமைப்பினை விவரிக்கிறார். இத்தகைய அணுகுமுறையினை யாப்பருங்கலம் முதலான பிற்கால நூல்களில் காணமுடிய வில்லை. அந்நூல்களில் எழுத்து முதல் தொடை வரையிலான ஓசை உறுப்புக்கள் மட்டுமே செய்யுளின் கட்டமைப்பாகக் கொள்ளப்பட்டுள்ளன. ஏனைய உறுப்புக்களை அவை பொருள் இலக்கணமாகக் கருதி, நீக்கியுள்ளன எனலாம். அவ்வாறாயின், தொல்காப்பியம் பொருள், எழுத்து, சொல் என்னும் யாவற்றையும்

செய்யுளுக்கு உரியனவாகக் கருதுகிறது என்பது வெளிப்படையான உண்மையாகும்.

சிறந்த கவிதை

தொல்காப்பியம் சிறந்த கவிதைக்கான வரையறையினைச் சுட்டிக்காட்டுகிறது. கவிஞன் தான் சொல்லக் கருதிய கருத்தினை எவ்வித எச்சமும் இன்றி முழுமையாக, கவிதைக்கென வரையறுக்கப்பட்டுள்ள அடிகளுக்குள் அமைந்து கிடக்குமாறு செய்யப்படுவதே சிறந்த கவிதையாகும். இதனைத் தொல்காப்பியம் 'யாப்பு' என்னும் சொல்லால் குறிப்பிடுகிறது. இந்த விளக்கம் கவிதையின் பாடுபொருளுக்கும் அதன் புற அமைப்பிற்கும் இடையிலான ஒருங்கிணைவினைக் காட்டுகிறது. மேலும், கவிதையின் விவரிப்பு முறையும் இந்நூலில் சுட்டப்படுகிறது.

'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்'

என்னும் வரையறை அகப்பாடல்களுக்கு உரியதாகப் பரவலாகக் கருதப்படுகிறது. எனினும் இதனைக் கவிதை அமைப்பிற்குரிய பொதுவான வரைவிலக்கணமாகவும் கொள்ளலாம். வெறும் புனைந்துரை சார்ந்த நிகழ்வுகளையோ (நாடக வழக்கினையோ) நடப்பியல் சார்ந்த நிகழ்வுகளையோ மட்டும் கொண்டு எழுதப்படும் கவிதை சிறந்தது ஆகாது. கவிதையின் கவினுக்குப் புனைந்துரையும் பாடுபொருளின் நம்பகத்தன்மைக்கு நடப்பியலும் இருக்கும்போதுதான் ஒரு கவிதை உள்ளத்தில் உணர்ச்சி பொங்கக் கருத்துக்களைச் சுவைஞர்களால் ஏற்றுக் கொள்ளும் தகுதியைப் பெறுகிறது. எனவே இவ்விருவகை வழக்குகளும் கவிதையின் சிறப்புக்கு இன்றியமையாதன ஆகின்றன. இவை தவிர, கவிஞரின் ஆழ்ந்த புலமைத்திறனும் கவிதைக்குச் சிறப்பை ஊட்ட வல்லது. ஆழ்ந்த புலமை உடைய கவிஞனாலேயே உயிரோட்டமுள்ள சொற்களைத் தகுந்த இடங்களில் தேர்ந்தெடுத்து வைக்கமுடியும்; ஆழ்ந்த, நிலைத்த, இனிய பாடு பொருளைக் கவின் மிகு கற்பனையுடன் அமைத்துக் காட்ட முடியும். இதனையே 'புலனெறி வழக்கம்' எனத் தொல்காப்பியம் சுட்டிக்காட்டுகிறது.

தொடரும்...

செந்தமிழ் ஆசிரியர் குழு

பதிப்பாசிரியர். இரா. சதாசிவம்

பேரறிஞர். நா. பாலுசாமி

பேரறிஞர். தமிழண்ணல்

பேரறிஞர். செ. கந்தசாமி

டாக்டர். ந. சேதுராமன்

பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி

பேரறிஞர். கதிர். மகாதேவன்

பேரறிஞர். அ.அ. மணவாளன்

பெரும் புலவர். இரா. இளங்குமரன்

பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி

பேரறிஞர். ந. வரசுகிராஜா

பேரறிஞர். இ.கி. இராமசாமி

பேரறிஞர். சே. அரிராமநாதன்

திரு. வே. திருவரங்கராசன்

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. ✆2532879

அன்பு அச்சகம், மதுரை-1. ✆2341116